Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ்Mirror

TUESDAY, JULY 25 2023

செவ்வாய்க்கிழமை, ஜூலை 25, 2023 | ஒளி: 09 கதிர் 047 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## வட்டி சதவீதத்தை குறைக்கவும்



வங்கிகளில் கடன்களுக்கான வட்டி வீதத்தை உடனடியாக குறைப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்குமாறு சகல வங்கிகளுக்கும் அவசர அறிவுறுத்தலை மத்திய வங்கி வழங்கியுள்ளது.

இலங்கை வங்கி சங்கத்தின் தலைவருக்கு மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க இது தொடர்பில் அறிவுறுத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2




# எமது இனம் புதைந்து காணாமல் போவதா?

### எழுந்துவா தமிழா இனமாக ஒன்றுபடு

### வெள்ளியன்று கவனயீர்ப்பு போராட்டம்

### பூரண ஹர்த்தாலுக்கும் அழைப்பு

### வர்த்தக நிலையங்களை மூட அறிவுறுத்து

**சண்முகம் தவசீலன், எம்.றொசாந்த்**

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரத்துக்கு நீதி கோரியும் சர்வதேச நிபுணத்துவத்தை, கண்காணிப்பை வலியுறுத்தியும் எதிர்வரும் வெள்ளி க்கிழமை (28) மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்துக்கும் பூரண ஹர்த்தாலுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## "அதற்கு சரிப்பட்டு வரவே மாட்டார்"



அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மும்முனைப்போட்டியே இடம்பெறும் என்றும் அதில் சஜித் பிரேமதாச இடம்பெறமாட்டார் என்றும் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அனுரகுமார திஸாநாயக்க மற்றும் டலஸ் அழகப்பெரும ஆகிய மூவருக்கும் இடையேயே போட்டி இடம்பெறும் என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ஆஸ்பிரின் நிறுத்தம்



உள்நாட்டில் தயாரிக்கப்படும் ஆஸ்பிரின் வகையின் பயன்பாட்டை தற்காலிகமாக நிறுத்த சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது.

குறித்த மருந்தின் பாதுகாப்பு தரம் தொடர்பில் ஏற்பட்டுள்ள கவலைகளை அடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டொக்டர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மருந்து மற்றும் அது தொடர்பில் ஏற்பட்டுள்ள கவலைகள் தொடர்பான உண்மைகளை முன்வைக்க தயாரிப்பு நிறுவனத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக டொக்டர் ரத்நாயக்க குறிப்பிட்டார்.

அத்துடன், ஒரு வகை ஆஸ்பிரின் மருந்துகளை திரும்ப பெற முடிவெடுப்பதால் சந்தையில் ஆஸ்பிரின் மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்படாது என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

## அஸ்வெசும வேண்டாம்

### ஜனாதிபதிக்கு எம்.பிக்கள் விரைவில் கடிதம்




நலன்புரி கொடுப்பனவு திட்டத்தை இடைநிறுத்துமாறு ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வறிய மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் நோக்கில் அஸ்வெசும எனும் நலன்புரி திட்டம் அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நலன்புரி திட்டத்தின் மூலம் கொடுப்பனவு வழங்குவதனை தற்காலிக அடிப்படையில் இடைநிறுத்துமாறு ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கோரியுள்ளனர்.

தொடர்ச்சி P2

## கடலில் மூழ்கிய மூவரில் இருவர் சடலங்களாக மீட்பு

**எம்.இஸட். ஷாஜஹான்**

நீர்கொழும்பு கடற்கரையில் நீராடச் சென்று நீரில் மூழ்கி காணாமல் போயுள்ள மூன்று இளைஞர்களில் இருவரின் சடலங்கள் திங்கட்கிழமை(24) மீட்கப்பட்டுள்ளன.

தலவாக்கலை, டயகம பிரதேசத்தை சேர்ந்த வடிவேல் அரவிந்த்த குமார் (23) என்பவருடைய சடலம் திங்கட்கிழமை அதிகாலை 4 மணியளவில் சம்பவம் இடம்பெற்ற ஏத்துக்கால



கடற்பகுதியில் சிறிது தூரத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளது,

தொடர்ச்சி P2



## 20 குடும்பங்களுக்காக 4 பேர் உணவு தவிர்ப்பு

**சண்முகம் தவசீலன்**

20 குடும்பங்களை விரைவில் குடியேற்றுமாறு கோரி முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு கைவேலி பகுதியில் திங்கட்கிழமை (24) நால்வர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## பங்களிப்பை எதிர்பார்த்துள்ளேன்

## யுவான் ஜியாஜூயிடம் ஜனாதிபதி எடுத்துரைப்பு



சீன கமியூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழு மற்றும் அரசியல் குழுக்களின் உறுப்பினரும், ஷொங் கிங் நகரசபைக் குழுவின் செயலாளருமான யுவான் ஜியாஜூன் உள்ளிட்ட சீன தூதுக்குழுவினர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைச் ஜனாதிபதி அலுவலகத்தில் சனிக்கிழமை (22) சந்தித்து கலந்துரையாடினர்.


இலங்கையின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து யுவான் ஜியாஜூன் தலைமையிலான சீனத் தூதுக்குழுவினருக்கு விளக்கமளித்த ஜனாதிபதி, நாட்டிலுள்ள புதிய வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்தும் தெளிவுபடுத்தினார்.

தொடர்ச்சி P2

## அடுத்த வாரம் முட்டை ரூ.35

இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை லங்கா சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். இறக்குமதி செய்யப்படும் முட்டைகள் தலா 35 ரூபாய்க்கு அனைத்து சதொச விற்பனை நிலையங்களிலும் அடுத்த வாரத்தில் இருந்து விற்பனை செய்யப்படும் என அமைச்சர் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## 3 சிறுமிகள் தப்பியோட்டம்

கம்பஹாவிலுள்ள சிறுவர் இல்லமொன்றில் வசித்து வந்த 16 வயதுடைய 3 சிறுமிகள் தப்பிச் சென்றுள்ளதாக கம்பஹா பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## நோர்வே தூதரகம் மூடப்படுகிறது

இலங்கைக்கான நோர்வே தூதரகம் 2023 ஆம் ஆண்டு ஜூலை 31 ஆம் திகதியுடன் இலங்கையில் செயற்பாடுகளை முடித்துக்கொள்வதாக அறிவித்துள்ளது.

இலங்கை மற்றும் மாலைத்தீவுடனான நோர்வேயின் இருதரப்பு உறவுகளுக்கு புதுடெல்லியில் உள்ள நோர்வே தூதரகம் ஒகஸ்ட் 01 முதல் பொறுப்பேற்கும் என்று தூதரகம் அறிவித்துள்ளது.

இலங்கையில் உள்ள நோர்வே தூதரகத்தின் முகநூல் பக்கம் மூடப்படும் என தெரிவித்துள்ள தூதரகம்,

தொடர்ச்சி P2



## 463 யானைகள் உயிரிழப்பு



கடந்த வருடத்தில் மாத்திரம் 463 யானைகள் உயிரிழந்துள்ளதாக இலங்கையின் சுற்றாடல் மற்றும் இயற்கை ஆய்வுகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்




# எமது இனம் புதைந்து காணாமல் போவதா?

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாண தலைவர்களே கூட்டாக அழைப்பு விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் திங்கட்கிழமை (24) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்துக்கும் பூரண ஹர்த்தாலுக்கும் அழைப்பு விடுத்துள்ளனர்.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் முல்லைத்தீவு மாவட்ட தலைவி மரியசுரேஷ் ஈஸ்வரி,வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் பிரபாகரன் றஞ்சனா, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் வவுனியா மாவட்ட தலைவி சிவானந்தன் ஜெனிதா வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் மன்னார் மாவட்ட தலைவி மனுவல் உதயச்சந்திரா ,வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் யாழ்ப்பாண மாவட்ட தலைவி சிவபாதம் இளங்கோதை ஆகியோர் இணைந்து இந்த அழைப்பை விடுத்துள்ளனர்.

28.07.2023 அன்றையதினம் முல்லைத்தீவு நீதிமன்றத்திற்கு அருகில், மக்கள் இறுதி யுத்தத்தில் உறவுகளை இராணுவத்திடம் கையளித்த பகுதிக்கு அண்மையில் ஆரம்பிக்கும் கவனயீர்ப்பு பேரணியானது முல்லைத்தீவு நீதிமன்றத்திற்கு முன்பாக சென்று மாங்குளம் முல்லைத்தீவு வீதியூடாக மாவட்ட செயலகத்தை வந்தடைந்து அங்கு மாபெரும் கண்டண ஆர்ப்பாட்டம் ஒன்றும் மேற்கொள்ளப்படவுள்ளது.

குறித்த தினத்தில் வடக்கு கிழக்கு பகுதிகளை சேர்ந்த வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் அனைவரும் இணைந்து மாபெரும் போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளதோடு அன்றைய போராட்டத்தில் அனைத்து தரப்பினரும் அரசியல் கட்சிகளும் எவ்வித பேதமுமின்றி ஆதரவளிக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள து.

அத்துடன் மத தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள்,பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட அனைவரையும் பங்குகொள்ளுமாறும் அன்றையதினம் வடக்கு கிழக்கில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறும் வர்த்தகர்கள் வர்த்தக நிலையங்களை மூடி,போக்குவரத்துக்களை நிறுத்தி ஆதரவளிப்பதுடன் முல்லைத்தீவில் நடைபெறவுள்ள போராட்டத்திலும் அனைவரும் பங்கேற்கவேண்டும் எனவும் அழைப்பு விடுத்துள்ளனர்.

## வட்டி சதவீதத்தை குறைக்கவும்

மத்திய வங்கியின் நிதிச்சபை இம்மாதம் ஐந்தாம் திகதி கூடியது. அதன் நிரந்தர வைப்புச் சலுகை சதவீதத்தை நூற்றுக்கு 11 சதவீதமாகவும், நிரந்தர வைப்பிற்கான கடன் சலுகை சதவீதத்தை நூற்றுக்கு 12 சதவீதத்தாலும் குறைப்பதற்கு தீர்மானம் எடுத்துள்ளது.

இத்தீர்மானத்திற்கு இணங்க வங்கிகள் மற்றும் நிதி கட்டமைப்பு தமது வாடிக்கையாளர்களுக்கு இதன் பிரதிபலனை பெற்றுக் கொடுக்க வேண்டும் என மத்திய வங்கியின் ஆளுநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மத்திய வங்கி மேற்கொண்டுள்ள தீர்மானத்துக்கு இணங்க செயற்படத் தாமதித்தால் இது தொடர்பில் நிர்வாக ரீதியான தீர்மானத்தை மேற்கொள்ள நேரிடும் என்றும் மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

## அதற்கு சரிப்பட்டு வரவே மாட்டார்



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அடிக்கடி காட்டும் தயக்கம் காரணமாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட மாட்டார் என்றும் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மேலும், சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வது தனக்கு இலகுவாக இருக்கும் என்பதால், விமான நிலையங்களைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க விரும்புவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## அஸ்வெசும வேண்டாம்

இது தொடர்பிலான விசேட எழுத்து மூல கோரிக்கை விரைவில் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த கொடுப்பனவு திட்டத்தின் போது அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்கும் நோக்கில் இவ்வாறு நலன் குறித்த திட்டத்தை ஒத்திவைக்குமாறு கோரப்படுகிறது.

நலன்புரி திட்டத்தை தற்காலிகமாக ஒத்திவைக்கும் யோசனைக்கு ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் 52 பேர் கையொப்பமிட்டுள்ளனர்.

ஆளும் கட்சியின் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களைப் போன்று எதிர்க் கட்சியின் உறுப்பினர்கள் சிலரும் இந்த கோரிக்கையில் கையொப்பம் இட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த திட்டத்தில் வருமானம் குறைந்தவர்களுக்கு உரிய முன்னுரிமை வழங்கப்படவில்லை என குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த கொடுப்பனவை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கடலில் மூழ்கிய...

கொஸ்லாந்தை பிரதேசத்தை சேர்ந்த சத்தியமூர்த்தி சிறிவிந் (21) என்பவருடைய சடலம் முற்பகல் 9. 40 மணியளவில் ஏத்துக்கால கடற்பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சுண்ணாகம் பிரதேசத்தை சேர்ந்த ஜெயலக்ஷ்மனின் (23) சடலத்தை தேடும் நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றது.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய தொழிற்சாலைகளில் பணிபுரியும் குறித்த இளைஞர்கள் தமது நண்பர்களுடன் நீர்கொழும்பு பிரவ்ன்ஸ் பீச் ஹோட்டல் அமைந்துள்ள கடற் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை(23) குளிக்க சென்ற போதே கடல் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளனர்.

## அடுத்த வாரம் முட்டை ரூ.35

நாளொன்றுக்கு சுமார் 100,000 முட்டைகளை சந்தைக்கு விநியோகிக்கப்படும் என நம்புவதாகவும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

உள்ளூர் சந்தையில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு மற்றும் விலை அதிகரிப்பு காரணமாக இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்வதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியது. ஆனால், இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் ஹோட்டல் மற்றும் பேக்கரி உரிமையாளர்களுக்கு மட்டுமே விநியோகிக்கப்பட்டன.

முட்டைகளை இறக்குமதி செய்த போதிலும், உள்ளூர் விலையில் மாற்றம் இல்லாதால், இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை விநியோகிக்க வர்த்தக அமைச்சு முடிவு செய்துள்ளது.

## சிறுமிகள் தப்பியோட்டம்

இந்த விடயம் தொடர்பில் சிறுவர் இல்ல பாதுகாவலர் கம்பஹா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்து தப்பிச்சென்ற சிறுமிகள் தொடர்பில் அருகில் இருக்கும் பொலிஸ் நிலையங்களுக்கு பொலிஸாரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

தப்பிச்சென்ற சிறுமிகளை தேடும் பணியில் கம்பஹா பொலிஸார் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நோர்வே தூதரகம் மூடப்படுகிறது

புதுடெல்லியில் உள்ள நோர்வே தூதரகத்தின் பக்கத்தைப் பின்தொடருமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தியா, இலங்கை மற்றும் மாலைத்தீவுகளுடனான அதன் தற்போதைய ஒத்துழைப்பு குறித்த கூடுதல் தகவல்கள் புதிய பேஸ்புக் பக்கத்தில் கிடைக்கும் என்று தூதரகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தனது @NorwAmbLK எனும் ட்விட்டர் கணக்கு புதுப்பிக்கப்பட மாட்டாது என இலங்கை மற்றும் மாலைதீவுக்கான நோர்வே தூதுவர் ட்ரைன் ஜோரன்லி எஸ்கெடல் தெரிவித்துள்ளார்.

புதுப்பிப்புகளுக்கு @norwayinindia ஐப் பின்தொடருமாறு பொதுமக்களை தூதரம் கேட்டுக்கொண்டது.

## 20 குடும்பங்களுக்காக 4 பேர் உணவு தவிர்ப்பு

புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியின் ஓரத்தில் கைவேலி பகுதியில் தகர கொட்டகை ஒன்றை அமைத்து அவர்கள் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். "நாங்கள் வாழ்ந்த இடத்தில் எங்களை மீளக் குடியேற்றுங்கள்" என்ற கோரிக்கையை முன்வைத்து இந்த உணவு தவிர்ப்பு போராட்டம் இடம்பெறுகின்றது.

இவ் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ரவிச்சந்திரன் உதயச்சந்திரன் மூன்று அங்கத்தவர்களை கொண்ட குடும்பத் தலைவர்,யோகேஸ்வரன் மயூரன் மூன்று அங்கத்தவர்களை கொண்ட குடும்பத் தலைவர்,கணபதி கதிர்க்கீரன் எட்டு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்தின் அங்கத்தவர்,கோவிந்தன் பிரசாந்தன் மூன்று அங்கத்தவர்களை கொண்ட குடும்பத் தலைவர் ஆகியோர் தங்கள் 20 குடும்பங்களை விரைவில் குடியேற்றுமாறு கோரி இப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கைவேலி பகுதியில் 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப்புலிகள் அமைப்பின் 45 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டு குறித்த பகுதியில் 45 குடும்பங்கள் குடியேறி இருந்தன. இந்நிலையில் 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு வந்தபோது குறித்த பகுதியை விட்டு மக்கள் சென்ற பின்னர் குறித்த பகுதியில் இருந்த குடும்பங்கள் மீள்குடியேற்றம் வரவில்லை பலர் உயிரிழந்தனர். இன்னும் சிலர் வேறு இடங்களில் குடியேறிவிட்டனர்.

இவ்வாறான நிலையில் குறித்த கிராம மக்கள் 2012 ஆம் ஆண்டு கைவேலி பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட போது குறித்த பகுதியை வனவள திணைக்களம் எல்லைக் கற்கள் இட்டு வனப்பகுதியாக்கி விட்டது.

இவ்வாறான பின்னணியில் மக்கள் வாழ்ந்த வீடுகள், கட்டுக் கிணறுகள், கட்டடங்கள், பயன் தரும் மரங்கள் உள்ள கைவேலி பகுதியில் காணிகள் வீடுகள் அற்ற சுமார் 20 குடும்பங்கள் பலகாலமாக குடியேறி வாழ முயற்சித்து வந்த அங்கு சென்று கொட்டில்களை அமைத்து குடியேறியுள்ளனர்.

இந்நிலையில், குறித்த பகுதிக்கு அண்மையில் சென்ற வனவள திணைக்கள அதிகாரிகள் அங்கு மக்கள் போட்ட கொட்டில்களை அகற்றி கொளுத்துவதற்காக மண்ணெண்ணையுடன் வருகை தந்ததாகவும் பெண்கள் தனிமையில் இருந்த கொட்டில்களில் சென்று முன்னாள் போராளியான பெண் ஒருவர் மீதும் ஆண் ஒருவர் மீதும் தாக்குதல் நடத்தியதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான பின்னணியில் தமது நிலத்தில் 20 குடும்பங்களை விரைவில் குடியேற்றுமாறு கோரி இப்போராட்டம் இடம்பெற்று வருகிறது.

## யுவான் ஜியாஜூயிடம் ஜனாதிபதி எடுத்துரைப்பு



மேற்படிச் செயற்பாடுகளுக்கான பிராந்திய ஒத்துழைப்புக்களை பலப்படுத்துவது தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டது. இலங்கையின் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் அரசாங்கத்தின் மறுசீரமைப்பு வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விளக்கமளித்தார்.

அந்த நடவடிக்கைகள் நிறைவடைந்தவுடன், இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்திச் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்கவுள்ளதோடு, தேசிய அபிவிருத்திக்கு அவற்றின் பங்களிப்பை எதிர்பார்த்துள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

சவால்களுக்கு மத்தியிலும் இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அர்ப்பணிப்புக்கு பாராட்டு தெரிவித்த சீன தூதுக்குழுவினர், இலங்கையின் எதிர்கால அரசியல், அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பிலும் நம்பிக்கை தெரிவித்தனர்.

## 463 யானைகள் உயிரிழப்பு

அத்துடன், கடந்த பத்தாண்டுகளில் ஒரு வருடத்தில் பதிவான அதிக யானை உயிரிழப்புகளின் எண்ணிக்கை இதுவென மையத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் கலாநிதி ரவீந்திர காரியவசம் தெரிவித்துள்ளார்.

இந்நிலை தொடருமானால், இலங்கையில் காட்டு யானையைக் கண்டறிவது அரிதான நிகழ்வாகிவிடும் என கலாநிதி ரவீந்திர காரியவசம் மேலும் தெரிவித்தார்.

# நெடுந்தீவில் மாட்டிறைச்சி கடைகள் தேவையில்லை

■ சுப்ரமணியம் பாஸ்கரன்

யாழ்.மாவட்டத்தின் பசுந்தீவு என அழைக்கப்படுகின்ற நெடுந்தீவில் மாட்டிறைச்சி கடைகள் தேவையில்லை என நெடுந்தீவு பிரதேச பொது அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

நெடுந்தீவு பிரதேசத்தில் மாட்டிறைச்சி கடைக்கான அனுமதி வழங்கப்பட்ட நிலையில் நாளாந்தம் ஒன்று அல்லது இரண்டு மாடுகளுக்கு அனுமதிகளை பெற்றுவிட்டு வயது குறைந்த மாடுகள் மற்றும் நல்லின மாடுகள் சட்ட விரோதமாக இறைச்சிக்காக வெட்டப்படுகின்றன என்று பிரதேச பொது அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

நெடுந்தீவில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் பொது அமைப்புக்களால் சுட்டிக் காட்டப்பட்டதுடன் கால்நடை வைத்தியரின் சிபார்சுகள் இன்றியும் உரிய அனுமதிகள் இன்றியும் கன்று குட்டிகள் இறைச்சிக்காக வெட்டப்படுவது தொடர்பில் ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டப்பட்டன.



இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டதுடன் பசுந்தீவாகிய நெடுந்தீவில் எதிர்காலத்தில் கால்நடைகளை பாதுகாக்க நயினாதீவில் மாட்டிறைச்சி கடைகள் இல்லாதது போன்று நெடுந்தீவிலும் மாட்டிறைச்சி கடைகளை மூடுமாறும் கோரிக்கை விடுத்துள்ளன.

அத்துடன் நெடுந்தீவில் இருந்து கால்நடைகள் படகுகள் மூலம் கடத்தப்பட்டும் வருகின்றன அன்மையில் கூட இவ்வாறு கடத்திச் செல்லப்பட்ட கால்நடைகள் மீட்கப்பட்டிருந்தன.

குறிப்பாக மிகவும் வயது குறைந்த மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்பட்டு வருவதாகவும் அனுமதி பத்திரத்தோடு ஒரு சில மாடுகளும் ஏனைய மாடுகள் சட்டவிரோதமாகவும் வெட்டப்படுவதாகவும் பிரதேச அமைப்புகளால் பொதுமக்களாலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

# 9 வளைவு பாலத்துக்கு அருகில் நிறையும் குப்பை

■ பாலிதஆரியவங்ச

மலையக புகையிரத பாதையின் அற்புதமான நிர்மாணத்தினால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் அமைந்துள்ள வரலாற்று சிறப்புமிக்க 9 வளைவுகள் கொண்ட எல்ல பாலத்திற்கு அருகில் உள்ள குப்பைமேடு சுற்றாடல் பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளதாக சுற்றுலாப்பயணிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இங்கு சேகரிக்கப்படும் வெற்று தண்ணீர் போத்தல்களை தினமும் அகற்ற எல்ல உள்ளூராட்சி மன்றம் நடவடிக்கை எடுக்காததால் குப்பைதொட்டிகள் நிரம்பியுள்ளதாகவும் இதனால் அந்த இடத்தில் வெற்று பிளாஸ்டிக் தண்ணீர் போத்தல்களை சிலர் தரையில் வீசிவிட்டு செல்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.



# கல்வி அமைச்சரை சந்தித்தார் செந்தில்

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும், கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இடையில் திங்கட்கிழமை (24) கலந்துரையாடல் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பில் கடந்த சில மாதங்களாக செந்தில் தொண்டமானால் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

அதன் அடிப்படையில் சுசில் பிரேமஜயந்த, கிழக்கு மாகாணத்தில் கல்வித் தரத்தை மேம்படுத்த உதவும் பாடம் சார்ந்த 700 ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு தேவையான அனுமதிகளை ஆளுநருக்கு வழங்கியுள்ளார்.



மேலும் கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு, தெரிவு செய்யப்படாத உயர் தேசிய ஆங்கில டிப்ளோமாதாரிகளின் நியமனம் தொடர்பாகவும் இதன் போது கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

# வெடிபொருட்களுடன் ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் பெருமளவில் வெடிபொருட்கள் மற்றும் ஆயுதங்கள் ஞாயிற்றுக்கிழமை (23) மீட்கப்பட்டுள்ளன.

இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய குறித்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது துப்பாக்கிகள் மற்றும் மகசின்கள் உள்ளிட்ட ஆயுதங்கள் வெடிபொருட்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.



இச்சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பூசாரி தோட்ட மாணவி மரணம்

■ சுதத் எச்.எம்.ஹேவா

பொகவந்தலாவை, பூசாரி (செப்பல்டன்) தோட்டத்தைச்சேர்ந்த 15 வயதான மாணவி, தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

ஏ.பிரியதர்ஷினி என்ற மாணவியே, தனது வீட்டுக்குள் வைத்து ஞாயிற்றுக்கிழமை (23) இரவு தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார். மூத்த சகோதரி, தன்னை தூற்றியதால் இந்த முடிவை எடுத்துள்ளதாக விசாரணைகளில் ஈடுபட்ட பொலிஸார் தெரிவித்தனர்.





# உலக சாதனை புத்தகத்தில் பெயரை பதித்த 3 வயது சிறுமி

■ செ.தி வாகரன்

நுவரெலியா மாவட்டத்தின் கொட்டகலை பிரதேசத்தில் வசிக்கும் செந்தில்குமார்- ரேவதி தம்பதிகளின் புதல்வியான பவிஷ்ணா தனது மூன்று வயதில் உலக நாடுகளின் 40 தலைவர்களின் புகைப்படங்களை பார்த்து அவர்களின் பெயர்களை ஒரு நிமிடத்தில் மிக வேகமாகக் கூறி உலக சாதனைப் புத்தகத்தில் (international book of world record) தனது பெயரை பதிவு செய்து பெருமை சேர்த்துள்ளார்.

உலக சாதனை புத்தக நிறுவனமானது இச்சிறுமியின் திறமையையும், அதீத நினைவாற்றலையும் பரிசீலனை செய்து உலக சாதனைப் புத்தகத்தில் பதிவு செய்து சாதனைச் சிறுமியாக தமது இணையதளத்தில் வெளியிட்டுள்ளது. கடந்த மார்ச் மாதம் இதற்காக விண்ணப்பித்து ஏப்ரல் மாதம் சாதனை படைத்த சிறுமியாக அறிவித்து இவருக்கான இலச்சினை, பதக்கம், மற்றும் சான்றிதழ் என்பவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.



தனது மூன்று வயதில் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்த பவிஷ்ணா, கொட்டகலை வரலாற்றில் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்த இரண்டாவது சாதனை சிறுமியாவார். இந்த வரலாற்று சாதனையை நிகழ்த்திய சிறுமியை பிரதேச மக்கள் பலரும் பாராட்டி வருகின்றார்கள்.

இச்சிறுமி எதிர்காலத்தில் கல்வித் துறையிலும், ஏனைய துறைகளிலும் மேன்மேலும் பல சாதனைகளைப் பெற்று எதிர்காலத்தில் நாட்டிற்கு பெருமையை தேடித் தரக் கூடிய ஒருவராக மிளிர வேண்டும் என்று பலரும் வாழ்த்துகின்றனர்.

# நூற்றாண்டைநோக்கிய பயணம்



மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை நகரில் புகழ்பெற்ற பழமை வாய்ந்த பாடசாலைகளில் ஒன்றான அன்னூர் தேசிய பாடசாலை நூற்றாண்டு விழாவை காண இன்னும் சில சொற்பகாலமே உள்ளது.

அந்த வகையில் “நூற்றாண்டை நோக்கிய பயணம்” எனும் தொனிப்பொருளின் கீழ் முதல் கட்டமாக பழைய மாணவர் சங்கத்தினால் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வை ஆரம்பிக்கும் முகமாக வெற்றி கிண்ணத்துடனான நடை பவனி அன்னூர் தேசிய பாடசாலை மைதானத்தில் இருந்து மத வழிபாடுகளுடனும், ஆரம்பிக்கப்பட்டு பாடசாலை முதல் வர்ஜனாப். தாஹிரின் ஆரம்ப உரையுடன் வாழைச்சேனை பிரதான வீதியின் ஊடாக நகர் முழுவதும் பாடசாலையின் பேன்ட் வாத்திய குழுவின் அணி வகுப்புடன் நடைபவனி இடம் பெற்றது.

பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினர்கள் மற்றும் பாடசாலையின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூகநலன் விரும்பிகள் பிரமுகர்கள் ஆகியோரின் பங்கேற்பில் மாபெரும் நடைபவனி ஊர்வலம் வெற்றிகரமாக இடம்பெற்று வெற்றிக்கிண்ணத்துடன் மீண்டும் பாடசாலை மைதானத்திற்கு கொண்டு வரப்பட்டது.

# காலி முகத்திடலில் சிறுமியை கடத்த முயற்சி

காலி முகத்திடலிற்கு தனது பெற்றோருடன் வந்திருந்த 7 வயதான சிறுமியை கடத்த முயன்ற நபர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை (23) கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அச்சிறுமியை தூக்கிக்கொண்டு ஓடும்போது, சிறுமி அபாய குரல் எழுப்பியதால், அங்கிருந்தவர்கள் அந்நபரை சுற்றி வளைத்தனர். இதனிடையே, அங்கு வந்த பெற்றோர், சிறுமியை மீட்டுள்ளனர்.

அதன் பின்னரே, அந்த நபரை பிடித்து பொலிஸாரிடம் மக்கள் ஒப்படைத்துள்ளனர். கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர், உட புஸ்ஸலா பிரதேசத்தை சேர்ந்த 33 வயதானவர் என்பது விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஓடையில் இருந்து சிசுவின் சடலம் மீட்பு

■ எஸ்.சதீஸ், செ.தி.பெருமாள், கௌசல்யா

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குற்பட்ட வெஞ்சர் பகுதியில் உள்ள ஓடையில் இருந்து, சிசுவின் சடலமொன்று மிதந்து கொண்டிருப்பதை கண்டு, அப் பிரதேச வாசிகள் நோர்வூட் பொலிஸ் நிலையத்திற்கு திங்கட்கிழமை (24) தகவல் வழங்கினர்.

அப் பகுதிக்கு சென்ற பொலிஸார் அங்கு பாதுகாப்பு வேலி அமைத்து சிசுவின் சடலம் பற்றி புலன் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன், ஹட்டன் நீதிமன்ற நீதவான் மற்றும் கைரேகை நிபுணர்கள் சம்பவம் இடத்துக்கு வருகை தந்து கைரேகை பதிவு செய்ய உள்ளதாகவும், பொலித்தீன் உறையில் சுற்றப்பட்ட நிலையில் சிசு ஓடையில் வீசப்பட்டுள்ளது எனவும் முதல் கட்ட விசாரணைகளுக்குப் பின்னர், சடலம், டிக்கோயா- கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் நோர்வூட் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.இந்நிலையில், சிசுவை பிரசவித்த தாய் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.



பியகம, பண்டாரவத்த, இல. 152/1 இல் உள்ள “குருவின் அடகு நிலையம்” என்ற நிறுவனமானது 2021.03.26 ஆம் திகதி முதல் மூடப்பட்டுள்ளது.

# கத்தரிக்கோல் தூக்கும் ஆசான்களும்: மாணவர்களின் ஒழுக்கமும்

பாடசாலை மாணவர்கள் கல்வியில் மட்டுமன்றி, விளையாட்டு, கலை, கலாசார போட்டிகள் உட்பட, இதர செயற்பாடுகள் மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றில் முன்மாதிரியாக இருக்கவேண்டும். ஒவ்வொரு பாடசாலைகளிலும் ஒழுக்கத்துக்கென ஆசிரியர் நியமிக்கப்பட்டிருப்பார். மாணவ தலைவர்கள் அடங்கிய குழுவொன்றும் இருக்கும்.

மாணவன் அல்லது மாணவி பொது வெளியில் நடந்துகொள்ளும் விதத்தை அவதானிக்கும் போது, சிறந்த பாடசாலையில் கல்வி பயில்பவர் என வெளியார் மனக்கணக்கு போட்டுவிடுவர். இன்னும் சில மாணவர்களை பார்த்தவுடனேயே, பெற்றோர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகளை முன்வைக்காது. இவர் எந்த பாடசாலையில் கற்கின்றார் என்றே கேள்வியெழுப்புவர்.

முன்னைய காலங்களில் பிரம்புகளுடனே ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு வருவார்கள். வகுப்பறைகளிலும் அதேமாதிரிதான் கடுமையாக கண்டிப்பர். ஒருசில ஆசான்கள் அல்லது ஆசிரியைகளின் பெயர்களை கேட்டால், மாணாக்கர் பலரும் தொடை நடுக்கி நிற்பர். ஏதாவது குழப்படிகளை செய்துவிட்டால், அச்சு இருக்கும் வரையிலும் வெளுத்து வாங்கிவிடுவார்கள்.

தங்களுக்கு நேர்ந்ததை வீட்டுக்குப் போய் சொன்னால், ஆசிரியர் பக்க நியாயத்தை மட்டுமே பெற்றோர் எடுத்துக்கூறுவார்கள். “உனக்கு இது போதாது, இன்னுமிரண்டு சேர்த்தே வைத்திருக்கவேண்டும்” என்பர். ஆனால், நிலைமை இன்று தலைகீழாக மாறிவிட்டது. கொஞ்சம் அதட்டி பேசினாலும், மனித உரிமை மீறப்பட்டதாக போர்க்கொடி தூக்கிவிடுவர்.

மாணவர்களுக்கான சில அமைப்புகளும், சமூகத்தின்பால் கடுமையான கரிசணையை கொண்டிருப்போர் என கூறிக்கொள்ளும் நபர்களும், முகப்புத்தங்களில் ஆசிரியர்களின் பெயர்களுடன், அவர்களுக்கு எதிரான விமர்சனங்களை முன்வைத்துவிடுவர். இருபக்க நியாயங்களுக்கு அவ்வாறானவர்களிடம் இடமே இருக்காது.

கொட்டகலை, பிரதேசத்தில் உள்ள பாடசாலையின் கல்வி பயிலும் மாணவர்கள் சிலர், நேர்த்தியாக தலைமுடியை வெட்டிக்கொண்டு வராமையால், அம்மாணவர்களை பிடித்து தலைமுடியை ஆசிரியரே கத்தரித்துவிட்டார். இது பெரும் பிரச்சினையாக மாறிவிட்டது.

நேர்த்தியாக வெட்டாமையால், தாங்கள் பாடசாலைகளுக்கு செல்லமாட்டோமென மாணவர்கள் சிலர் வீடுகளில் அடம்பிடித்துள்ளனர். அப்படியாயின், நேர்த்தியின் சென்றிருக்கவும் கூடாது. பல தடவைகள் அவதானித்து, அறிவுறுத்தியதன் பின்னர்தான் அந்த ஆசிரியர் இவ்வாறு செய்திருக்கக்கூடும். எனினும், மாணவர்களின் முடியை ஆசிரியர் வெட்டி குதறியிருக்கக்கூடாது.

தங்களுடைய தலைமுடி குதறியிருப்பதால், தாங்கள் இனிமேல் பாடசாலைக்குச் செல்லமாட்டோமென மாணவர்களும் அடம்பிடித்து இருக்கக்கூடாது. முடி, வளர்ந்துகொண்டே இருக்கும். அதனை, பாடசாலை மாணவர்களுக்கு ஏற்றவகையில், இரண்டு மாதங்களுக்கு ஒருதடவையேனும் வெட்டி நேர்த்தியாக வைத்துக்கொள்ளவேண்டும். பெற்றோர்களும் அறிவுறுத்தவேண்டும்.

கத்தரிக்கோலை எடுத்து ஒழுக்கத்தை கற்பித்த அந்த ஆசிரியரை தூற்றியிருக்கக்கூடாது. இந்த சம்பவத்தால் பட்டறிவுபெற்ற ஆசிரியர், யார்? எக்கேடு கெட்டுப்போனாலும் பரவாயில்லை, தான் உண்டு, தன் வேலையுண்டு என நினைத்து கற்பிப்பதுடன் நின்றுவிட்டார் எனின், அந்த பாடசாலை மாணவர்களின் ஒழுக்கம் கேள்விக்குறியாகிவிடும்.




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

தெரியாத விடயத்தை தெரிந்தது போல் பேசுவதால் அவமானப்பட நேரிடலாம். இத்தகைய நபர்கள் கேலிக்குரியவர்கள் ஆவார். எந்தச் சிறு விடயங்களையும், தெரியாது என உண்மையுடன் கூறினால் தவறில்லை.

மெத்தப் படித்தவர்களுக்கும் பல விடயங்கள் தெரியாமல் இருக்கலாம். முழுமையான ஞானம் உள்ளவர்களாக எவரையும் கடவுள் படைக்கவில்லை.

ஏதோ ஒரு விடயத்தில் மனிதன் இடறிவிடுகின்றான். தெரியாத விடயத்தைப் பற்றி அதிகம் கவலைப்பட வேண்டியதில்லை. வாழ்க்கை பூராவும் நாங்கள் எதை எதையோ கற்றபடிதான் இருக்கின்றோம்.

பாடசாலை, கல்லூரி, பல்கலைக்கழகத்தில் கல்விக் கற்று முன்னேறினாலும் கல்வியில் முடிவு தெரியாது. முழுமையாக எதையும் ஆராய்ந்து முடிகெடுக்க முடியாது. கல்வியில் நாட்டம் கூடக்கூட, அதன் மீதான ஈர்ப்பும் தொடர்ந்தவண்ண வண்ணமாகவே இருக்கும்.

கல்வி ஒருவரை வெளிச்சத்தக்கு இட்டுச் செல்கின்றது. கல்வியில் ஈர்ப்புக் கொண்டவர்கள் பாக்கியவான்கள்.

- பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### காவலாளியை நியமிக்கவும்

முல்லைத்தீவு பாண்டியன் குளம் மகா வித்தியாலயத்திற்கான காவலாளி ஒருவரை நியமிக்குமாறு பொது பெற்றோர்கள் பழைய மாணவர்கள் மற்றும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்தின் கீழுள்ள மாந்தை கிழக்கு பிரதேசத்தின் முதல் நிலை பாடசாலைகளில் ஒன்றாக காணப்படுகின்ற பாண்டியன் குளம் மகா வித்தியாலயத்துக்கு காவலாளி ஒருவர் இதுவரை நியமிக்கப்படவில்லை. கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக காவலாளியற்ற நிலையில் குறித்த பாடசாலை இயங்கி வருகின்றது. பாடசாலையின் ஆசிரியர் விடுதிகளில் தங்கியுள்ள ஆசிரியர்கள் மற்றும் பிரதேச மக்களினுடைய பாதுகாப்புடன் குறித்த பாடசாலை காணப்படுகின்றது.

எனவே, இப் பாடசாலைக்கான நிரந்தர காவலாளி ஒருவரை நியமிக்குமாறு பிரதேச பொது அமைப்புகளும் பெற்றோர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த பாடசாலையில் புலம்பெயர் நாடுகளில் உள்ள பழைய மாணவர்களுடைய உதவியுடன் பல்வேறு உதவி திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்நிலையில், இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து காவலாளி ஒருவரை நியமிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

- யது பாஸ்கரன்

தீர்வு குறித்து

# வாயைத் திறக்க வேண்டிய முஸ்லிம் தரப்பு

மொஹமட் பாதுஷா

இனப் பிரச்சினைத் தீர்வு பற்றிய பேச்சுக்கள் தொடர்ந்தும் இடம்பெற்றுக் கொண்டு இருக்கின்றன. ‘தீர்வு’ என்னவோ கண்ணுக்கு எட்டிய தூரத்தில் தெரியவில்லை என்றாலும் தமிழ் தரப்பும் அவர்களுக்கு துணைநிற்கின்ற சில சர்வதேச நாடுகளும் இதற்காக உழைத்துக் கொண்டுதான் இருக்கின்றன.

1950 களில் கட்டமைக்கப்பட்ட இன முரண்பாடு தோற்றம் பெற்றது எனக் கூறலாம் எனினும், உண்மையில் இது தமிழர்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையிலான ஒரு நேரடி இன முறுகலாக அப்போது இருக்கவில்லை. ஆரம்பத்தில் சிங்கள அரசாங்கத்திற்கும் தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் செயற்பாட்டாளர்களுக்கும் இடையிலான கருத்து வேறுபாடாகவே தோற்றம் பெற்றது.

காலவோட்டத்தில் அது இனங்களுக்கு இடையிலான முரண்பாடாக சிருஷ்டிக்கப்பட்டது. இந்தப் பிரச்சினைளுக்குள் இரண்டாவது சிறுபான்மையினமான முஸ்லிம்களும் வலிந்து இழுத்து விடப்பட்டனர் என்பதே வரலாறாகும்.

முஸ்லிம்களுக்கு தனிநாடு தேவைப்படவும் இல்லை. மறுபுறத்தில் தமிழர்களின் தனிஈழ கோரிக்கைக்கு குறுக்கே நிற்கவும் இல்லை. ஆனால், இன முரண்பாடுகள் மற்றும் ஆயுத வன்முறைகளால் முஸ்லிம்கள் இழந்தது கொஞ்ச நஞ்சமல்ல.

அதையெல்லாம் உலக நாடுகள் இப்போது பேசுவது கிடையாது. தமிழ் அரசியல்வாதிகளும், ஏன் முஸ்லிம் அரசியல்வாதிகள் மற்றும் பொறுப்பு வாய்ந்தவர்கள் கூட அதற்கான நீதியை நிலைநாட்டுமாறு கோரும் முயற்சிகள் அத்திபூத்தற்போல் கூட நடப்பதில்லை.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் மீண்டும் தமிழ் தரப்புடனான பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன. ஒரு கட்டத்தில் வேகமாகவும் இன்னும் சில நாட்களில் மந்தகதியிலும் இப் பேச்சுக்கள் நடந்தேறின. இந்தியாவுக்கு ஜனாதிபதி போகப் போகின்றார் என்பதையறிந்து, தமிழ் தரப்பு கொடுத்த அழுத்தத்தை தணிய வைப்பதற்காக ஜனாதிபதி ஏற்பாடு செய்த சந்திப்பு இன்னும் கொஞ்சம் ‘சூடாக’ அமைந்தது எனலாம்.

அந்தக் கூட்டத்தில் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த தான் தயார் எனவும், ஆனால் பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது எனவும் ஜனாதிபதி ரணில் தமிழ் அரசியல்வாதிகளிடம் கூறியிருக்கின்றார். அப்படி முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்றால் தேசிய அரசியலில், பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து அரசியல் தரப்பினரினதும்; சம்மதம் தேவை எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் டில்லிக்கு சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ‘13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தி மாகாண சபை தேர்தலை நடாத்துமாறு’ இந்தியப் பிரதமர் மோடி வலியுறுத்தியுள்ளார். ‘தமிழ் மக்களின் அபிலாசைகள் குறித்து வலியுறுத்தியுள்ளோம்’ என்று இந்திய வெளியுறவு அமைச்சு கூறியுள்ளது.

இந்திய பிரதமர் இலங்கை தமிழர்கள் மீதான கரிசனையை வலியுறுத்தியிருந்தாலும் பொலிஸ் அதிகாரங்களையும் கட்டாயம் வழங்க வேண்டும் என்றோ அல்லது சமஷ்டி தீர்வு பற்றியோ அவர் பிரத்தியேகமாக எதனையும் கூறவில்லை என்பது கவனிப்பிற்குரியது. அவ்வாறு விலாவாரியாக பேசுவது ராஜதந்திர நடைமுறையும் அல்ல.

இருப்பினும் ‘மறைமுகமாக ஒற்றையாட்சிக்கு அப்பாலான தீர்வையே இந்திய பிரதமர் கூறியிருக்கின்றார்’ என்று தமிழ் அரசியல்வாதிகள் வரவேற்றுள்ளனர். ‘பொலிஸ் அதிகாரம் குறித்து தனியே தீர்மானம் எடுக்க முடியாது என்பதை இந்தியாவுக்கு தெளிவுபடுத்தி விட்டோம்’ என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அறிக்கை விட்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க, ‘13ஆவது திருத்தத்திற்கு ரணில் எதிரானவர்; அல்ல என்றாலும், அதனை நடைமுறைப்படுத்த அவர் அஞ்சுவார்’ என்ற ஒரு கருத்தை சி.வி. விக்னேஸ்வரன் எம்.பி தெரிவித்துள்ளார்.

அரசாங்கமும் பிரதான தமிழ் தரப்பும் இனப் பிரச்சினைக்கான தீர்வுப் பொதி தொடர்பாக கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்ற சமகாலத்தில் சிங்கள அரசியல்வாதிகள் சிலர் ‘இனப் பிரச்சினையே இல்லை’ என்றும் ‘தமிழ் மக்கள் சமஷ்டியை கோரவில்லை’ எள்றும் பகிரங்கமாக கூறி வருகின்றனர்.

யுத்தம் முடிவுக்கு வந்து 14 வருடங்களான பிறகும் இலங்கையில் மட்டுமல்ல சர்வதேச அரங்கில் கூட இனப் பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயம் ஒரு தவிர்க்க முடியாத இடத்தைப் பிடித்திருக்கின்றது. இதில் தமிழ் அரசியல்வாதிகள், செயற்பாட்டாளர்கள், டயஸ்போரா எனப் பலரது பங்களிப்பு உள்ளது.

அதிகாரப் பகிர்வு என்ற அடிப்படையிலேயே தீர்வு கோரப்படுகின்றது. அதற்கமைய சமஷ்டி முறைமை, 13ஆவது திருத்தம், காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இணைப்பு எனப் பல விடயதானங்கள் இதன்கீழ் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற மற்றுமொரு சிறுபான்மை இனம் என்ற வகையிலும், இன முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட சமூகம் என்ற வகையிலும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு விடயத்திலும் முஸ்லிம்களிற்கு தொடர்பு இருக்கின்றது. அவர்களது நலனும் அபிலாசையும் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருக்கின்றது.

ஆகவே நீண்டகாலமாக பேசப்பட்டுக் கொண்டிருக்கின்ற இவ்விடயங்கள் தொடர்பில் முஸ்லிம் சமூகம் என்ன நினைக்கின்றது என்பது மிக முக்கியமானது. தீர்வு ஒன்று முன்வைக்கப்பட்டால் (?) அதில் முஸ்லிம்களின் பங்கு என்னவாக இருக்கும்? இருக்க வேண்டும் ? என்பது முன்னரே தீர்மானிக்கப்பட்டாக வேண்டும் என்பதை யாரும் மறுக்கவியலாது.

ஆனால், அரசாங்கம் இது பற்றி முஸ்லிம்களுடன் பேசவில்லை. அரச - தமிழ் தரப்பு பேச்சுக்களில் முஸ்லிம் தரப்பும் உள்வாங்கப்படவில்லை. அதேநேரம் முஸ்லிம் கட்சிகள், தலைவர்கள், எம்.பிக்கள் தம்முடைய ஒருமித்த நிலைப்பாட்டை ஆவண ரீதியாகவும் கருத்தியல் ரீதியாகவும் பகிரங்கமாக அறிவிக்கவும் இல்லை.

இதற்கு அடிப்படையாக சில காரணங்கள் உள்ளன. அதாவது ‘இதுவெல்லாம் நடக்காது’ என்று முஸ்லிம் அரசியல்வாதிகள் நினைக்கின்றனர். அப்படி நடந்தால் கடைசியாக நாம் பேசலாம் என எண்ணுகின்றனர். அடுத்தது அநேகமான முஸ்லிம் எம்.பி.க்களுக்கு வடக்கு, கிழக்கு விவகாரங்கள் மற்றும் இனப் பிரச்சினை தீர்வு பற்றிய ஆழமான அறிவு கிடையாது.

முஸ்லிம் தலைவர்கள், எம்.பிக்களிடம் சமூக விடயங்களில் ஒற்றுமை இல்லை. கணிசமான எம்.பி.க்கள், பெருந்தேசியக் கட்சிகள் அல்லது அரசாங்கத்திற்கே திரைமறைவில் கூஜா தூக்குகின்றனர். தமக்கு கிடைக்கின்ற ‘கைமாறுகளை’ பெற்றுக் கொள்கின்றனர். எனவே நாவிழந்துள்ளனர்.

இதேநேரம் பள்ளிவாசல்கள், புத்திஜீவிகள் உள்ளிட்ட முஸ்லிம் சிவில் சமூகம் இது விடயத்தில் தமது தார்மீகக் கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறி வருகின்றது.

உண்மையிலேயே இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென்றால் அது தமிழர்களையும் அரசாங்கத்தையும் திருப்திப்படுத்தினால் மட்டும் போதாது. வடக்கு, கிழக்கில் சரிசமமாக வாழ்கின்ற முஸ்லிம் சமூகமும் திருப்திப்படுத்தப்பட வேண்டும். இம் மாகாணங்களில் உள்ள சிங்கள மக்களின் உணர்வுகளையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீள இணைக்கப்படாது என்ற கருத்தை ஜனாதிபதியும் தமிழ் தரப்புடன் கூறியிருக்கின்றார். அதேவேளை, முஸ்லிம்களும் இவ்விரு மாகாணங்களும் இணைக்கப்படுவதை அறவே விரும்பவில்லை கவனிக்க வேண்டும். அதற்கு பல காரணங்கள் உள்ளன. இணைந்த வடகிழக்கில் அவர்கள் பெற்ற கசப்பான அனுபவங்கள் இதில் முதன்மையானவை.

அதேபோல், 13ஆவது திருத்தம் அல்லது அதிகாரப் பகிர்வுக்கு முஸ்லிம்கள் எதிரானவர்கள் அல்லர். ஆயினும், காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் குறித்த அச்சம், கவனம் உள்ளது.

முஸ்லிம்களுக்கு காணி பற்றாக்குறையும் காணிப் பிரச்சினைகளும் உள்ளன. இந்நிலையில் அதிகாரம் தமிழர்களின் கையில் சென்றால் அவர்கள் சரிசமமாக, நியாயமான முறையில் முஸ்லிம் சமூகத்தை நடத்துவார்களா? அல்லது சமமான அதிகாரம் முஸ்லிம் சமூகத்திற்கு வழங்கப்படுமா என்பதில் தெளிவின்மை உள்ளது.

குறிப்பாக. பொலிஸ் அதிகாரம் கொடுக்கப்பட்டால் என்ன நடக்குமோ என்ற அச்ச உணர்வு முஸ்லிம்களுக்கு உள்ளது. இதற்குக் காரணம் கடந்தகால ஆயுதக் கலாசாரமும் அது தந்த அழிவுகளுமாகும்.

இந்தியா மட்டுமன்றி முழு உலக நாடுகளும் அழுத்தம் கொடுத்தாலும் அரசாங்கம் எப்போது அதிகாரப் பகிர்வை அடிப்படையாகக் கொண்ட தீர்வுக்குச் செல்லும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. ஆனால், அப்படி ஓர் அபூர்வம் நடந்தால் அதில் முஸ்லிம் சமூகத்திற்கும் இன விகிதாரப்படி அல்லது வேறு ஓர் அடிப்படையில் அதிகாரம் பகிரப்பட வேண்டும். அபிலாசைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

இவ்வாறு இனப் பிரச்சினையுடன் தொடர்புபட்ட அனைத்து விடயப் பரப்புக்களிலும் முஸ்லிம் சமூகத்தின் நிலைப்பாடும், நலனும் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருக்கின்றது. இந்தப் பணியை கடந்த 20 வருடங்களில் ஒரு முஸ்லிம் தலைமையாவது, எம்.பியாவது சரிவரச் செய்யவில்லை. ஆக இந்தத் வரலாற்றுத் தவறில் பெரும்பங்கு அரசியல்வாதிகளால் இழைக்கப்பட்டுள்ளது.

ஆனால், இனியாவது முஸ்லிம் அரசியல் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள் வாயைத் திறக்க வேண்டும். இனப் பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படாது என்ற கதையை எல்லாம் ஒருபுறம் வைத்துவிட்டு, ‘தீர்வு வழங்கப்படப் போகின்றது’ என்று கருதிக் கொண்டு, அதில் தமது சமூகத்தின் அபிலாசைகளை உறுதிப்படுத்துவதற்கான நிலைப்பாடுகளை முன்வைக்க வேண்டும்.

ஊமையாக, செவிடர்களாக நடிப்பதும், கடைசித் தருணத்தில் பஸ்ஸின் மிதிபலகையில் தொற்றிக் கொள்வதும் ‘டீல்’ அரசியலுக்கு வேண்டுமென்றால் உதவலாம். ஆனால் இந்தப் பொடுபோக்குத் தனம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்களில் முஸ்லிம்களின் அபிலாசைகளை உறுதிப்படுத்தும் விடயத்தில் ஒருபோதும் விடிவைப் பெற்றுத் தரவே மாட்டாது.

இலங்கை தமிழர்கள் பிரச்சினைகளை தீர்க்க

# மோடி நடவடிக்கை எடுக்க வேண்டும்

## அரசியலாளர் கே.எஸ்.ராதாகிருஷ்ணன் கருத்து

இலங்கை தமிழர்களின் பிரச்சினைகளை தீர்க்க பிரதமர் மேலும் பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அரசியலாளரும், வழக்கறிஞருமான கே.எஸ்.ராதாகிருஷ்ணன் கருத்து கூறியுள்ளார். காமராஜரின் ஸ்தாபனக் காங்கிரஸ், திமுக, மதிமுக ஆகிய கட்சிகளிலும் முக்கிய பங்கு வகித்த இவர், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு மிகவும் நெருக்கமானவர் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 1983-ம் ஆண்டு ஜூலை கலவரத்தை நினைவுகூரும் 'கறுப்பு ஜூலை' தினம் அனுசரிக்கப்படுவதை முன்னிட்டு, 'இந்து தமிழ் திசை' நாளிதழுக்கு அவர் அளித்த பேட்டி பின்வருமாறு:

**இலங்கை சுதந்திரம் அடைந்தது முதல் உருவான ஈழத் தமிழர் பிரச்சினை இன்னும் முடியாமல் நீள்கிறதே?**

ஆங்கிலேயரிடம் இருந்து 1948-ல் இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்பு சிம்லாவில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அப்போது, "இந்தியாவின் ஒரு தீவாகத்தான் இலங்கை இருந்தது" என்று கூறி அதையும் சேர்த்துக் கொள்ள மவுன்ட்பேட்டன் யோசனை தெரிவித்தார். அதற்கு நேருவும், வல்லபபாய் படேலும் சம்மதிக்கவில்லை என்ற கூற்றும் உண்டு. மதுரை, திருநெல்வேலி, ராமநாதபுரம், புதுக்கோட்டை உள்ளிட்ட தமிழகப் பகுதிகளைச் சேர்ந்த தமிழர்கள் தேயிலை தோட்டங்களில் பணியாற்றியதாலும், இலங்கையின் வடக்கு, கிழக்கு மாநிலங்களில் வாழ்ந்த பூர்வீகத் தமிழர்களாலும் மவுன்ட் பேட்டனுக்கு இந்த யோசனை உதித்துள்ளது.

இந்த இரு தரப்பினரும் அப்போது சிங்களவர் எண்ணிக்கைக்கு இணையாக இருந்துள்ளனர். இதை குறைக்க தேயிலை தொழிலாளர்களுக்கு குடியுரிமை மறுக்கப்பட்டு தமிழகம் அனுப்பப்பட்டனர். அதன்பின்னர் தமிழர்களுக்காக இலங்கை அரசு 1964-ம் ஆண்டுவரை 9 ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு அவற்றில் ஒன்றை கூட நிறைவேற்றவில்லை. காவல் துறை, அரசு நிர்வாகம் என அனைத்திலும் சிங்களர்கள் ஆதிக்கம். இவற்றை எதிர்த்து நடத்தப்பட்ட அரசியல் போராட்டங்கள் ஒடுக்கப்பட்டன. இதுபோன்ற பல இன்னல்களால், மே 14, 1976-ல் கொண்டுவரப்பட்ட வட்டுக்கோட்டை மாநாட்டின் தீர்மானத்துக்கு பிறகு தமிழர்களின் போராட்டத்தில் மாற்றங்கள் ஏற்பட்டன. 1970,1974-ம் ஆண்டுகளை விடப் பெரிதாக, 1983-ல் 'கருப்பு ஜூலை' எனும் பெரும் கலவரம் ஏற்பட்டது.

தலைநகர் கொழும்பில் கடந்த ஜூலை 24, 1983-ல் தொடங்கி 6 நாட்கள் நடைபெற்ற கலவரம் தனித்தமிழ் ஈழப்போராட்டமாக மாறியதில், அப்போதுசுமார் 5,000 பேர் உயிரிழந்து ஒன்றரை லட்சம் தமிழர்கள் வீடுகளை இழந்தனர். பிரபாகரனை போன்ற இலங்கை தமிழர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர். அதன்பிறகு தான் இலங்கை தமிழர்கள் அகதிகளாக நாட்டை விட்டு கிளம்பத் தொடங்கினர். இதை முன்னின்று நடத்தியவர் அன்று அமைச்சராக இருந்தவரும், ஜெயவர்தனேவின் மருமகனுமான தற்போதைய ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்கே.

**இப்பிரச்சினையில், முன்னாள் பிரதமர்களை விட தற்போதைய பிரதமர் மோடியின் அணுகுமுறை எப்படி உள்ளது?**

பிரதமர் நரேந்திர மோடியின் கவனத்தில், சீனாவின் ஆதிக்கமும், கோயில்களில் புத்த விஹாரங்கள் அமைத்து மாற்றப்படுவதும் என இரண்டு பிரச்சினைகளும் கவனத்தில் உள்ளன. யாழ்ப்பாணத்தில் தமிழர்களுக்காக ஒரு கலாச்சார மையம் கட்ட வைத்துள்ளார் பிரதமர் மோடி. இவர், இந்து மகா சமுத்திரத்தில் இந்தியாவுக்கு சவாலாகி வரும் புவி அரசியலையும் திறமையுடன் சமாளித்து வருகிறார்.

இந்தச் சூழலில், ஈழத் தமிழர்கள் பிரச்சினையை கையில் எடுக்கும்படி பிரதமர் மோடியை என் போன்றவர்கள் வலியுறுத்துகின்றனர். ஏனெனில், புவிஅரசியலில் ஈழத் தமிழர்கள் இந்தியாவின் பாதுகாப்புக்கு கேடயமாக இருப்பார்கள் என்பதை பிரதமர் மோடி உணர்கிறார். எனவேதான், பல்வேறு உத்திகளை பிரதமர் மோடி வகுத்துள்ளார். அவற்றை வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் மூலமாக செயல்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தகவல் கிடைக்கிறது. ஐஎப்எஸ் அதிகாரியாக இருந்த காலம் முதல் இலங்கை தமிழர்கள் பிரச்சினையை ஜெய்சங்கர் நன்கு அறிந்தவர். அதனால் இந்த பணிகளுக்கு ஜெய்சங்கர் முக்கிய பங்காற்றுவார்.

**இலங்கை தமிழர்கள் பிரச்சினைக்கு முடிவுகட்ட உங்களுடைய யோசனை என்ன?**

ஆங்கிலேயர் காலம் முதலாகவே இலங்கையில் தமிழர்கள் இரண்டாம்தரக் குடிமகன்களாகவே நடத்தப்பட்டனர். இதை சுதந்திரப் போராட்டக் காலத்தில் யாழ்ப்பாணத்துக்கு வந்த மகாத்மா காந்தியும், நேருவும் கூட உணர்ந்தனர். எனவே, இலங்கை தமிழர்கள் போராட்டம் முதல் நடைபெற்ற தமிழின அழிப்பு, தமிழ்த் தலைவர்கள் படுகொலைகள் உள்ளிட்ட கொடுமைகள் மீதுசர்வதேச அளவில் ஒரு சுதந்திரமான விசாரணை தேவை. முள்ளிவாய்க்கால் சம்பவமும் ஐக்கிய நாடுகள் சபையில் நிலுவையில் உள்ளது. இந்தப் பிரச்சினைகள் குறித்து விவாதம் நடத்த வேண்டும்.

> **"5,000 பேர் உயிரிழந்து ஒன்றரை லட்சம் தமிழர்கள் வீடுகளை இழந்தனர். பிரபாகரனை போன்ற இலங்கை தமிழர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர். அதன்பிறகு தான் இலங்கை தமிழர்கள் அகதிகளாக வெளியேறினர்**

இலங்கை மக்களின் எதிர்பார்ப்பு என்ன என்பதை அறியபொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும். அதிகாரங்கள் இன்றி பொம்மைகளாக இருக்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு முழு அதிகாரங்கள் வழங்க வேண்டும். இறுதிப் போர் நடைபெற்ற முள்ளிவாய்க்காலில் காணாமல் போன ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இதே முள்ளிவாய்கால் போருக்கு பின் கைது செய்யப்பட்டு சிறையிலுள்ள தமிழர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். வடக்கு, கிழக்கு மாநிலங்களில் தமிழர்களது காணி நிலங்களில் 14 வருடங்களாக ராணுவம் அமர்ந்து அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. அவசியம் இல்லாத இந்தராணுவத்தை அங்கிருந்து விலக்க வேண்டும்.

தமிழர்களுக்காக இந்திய அரசுஅளித்த நிதி முழுமையாக செலவிடப்படவில்லை. தமிழர்களே இல்லாத ராஜபக்சவின் தொகுதியான காலியில் மிகப்பெரிய ரயில் நிலையம் கட்டப்பட்டுள்ளது. இதில் வேடிக்கை என்னவெனில், பிரதமர் மன்மோகன் ஆட்சியில் வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த எஸ்.எம்.கிருஷ்ணா அந்த ரயில் நிலையத் திறப்புவிழாவுக்கு சென்றிருந்தார். இதுபோன்ற தவறுகளை இந்திய அரசு கணக்கு எடுத்து தம் நிதியை பயனுள்ள வகையில் செலவிட வலியுறுத்த வேண்டும்.

**பிரபாகரன் இன்னும் உயிருடன் இருப்பதாக ஒரு கருத்து எழுந்துள்ளதில் உண்மை என்ன?**

பிரபாகரனுக்கு மிகவும் வேண்டியவர்களில் முதலாமவர் நெடுமாறன், அடுத்து நான், பிறகு புலவர் புலமைப் பித்தன். கடந்த 1982-ல் பாண்டி பஜார் துப்பாக்கிச் சூடு சம்பவத்துக்கு பின்புதான் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் வெளியில் பரவலாக அறியப்பட்டார்.

ஆனால், அதற்கும் பல வருடங்களுக்கு முன்பே அவரை எங்களுக்கு தெரியும். சென்னையில் பிரபாகரன் மயிலாப்பூர் வீட்டில் என்னுடன்சுமார் ஒரு வருடம் தங்கி இருந்தார். நெடுமாறன் கூறியதன்படி நானும் பிரபாகரன் உயிருடன் இருப்பதாகவே நம்புகிறேன். இதை ஒரு காலத்தில் மதிமுக தலைவர் வைகோவும் வழிமொழிந்திருந்தார். அவர் எங்கோ உயிருடன் இருக்கிறார். இந்தியாவில் விடுதலைப் புலிகள் மீதான தடை நீங்கினால் ஒருநாள் வருவார்.

பிரபாகரன் உயிரிழந்ததாக இலங்கை அரசு கூறும் தகவல்களில் முரண்பாடுகள் உள்ளன. அவரது உடலின் டிஎன்ஏ சோதனை செய்யப்பட்டதாக வெளியான தகவலும் பொய். ஏனெனில், பிரபாகரன் உறவினர்களில் யாரிடம் இருந்து ரத்தம்எடுக்கப்பட்டது என்ற தகவல் இல்லை.

அப்போது, இந்த சோதனைக்கான வசதி இலங்கையில் இல்லை. அதற்காக இலங்கை அரசு இந்தியாவிலும் அதை செய்யவில்லை. டிஎன்ஏ பரிசோதனை முடிவுகள் வெளியாக குறைந்தது ஒரு வாரமாகும். ஆனால், இவர்கள் 24 நேரத்தில் செய்து கண்டுபிடித்ததாகக் கூறுவதை நம்ப முடிய வில்லை.

**மீன்பிடிக்கச் செல்லும் போது இலங்கையில் சிக்கும் மீனவர்களுக்கும் தீர்வு காண முடியாமல் உள்ளதே?**

இருதரப்பு மீனவர்கள் இடையே தேவையில்லாத மோதலை இலங்கை அரசு உருவாக்கி வருகிறது. கச்சத் தீவை மீட்டால் தமிழக மீனவர்கள் பிரச்சினை தீர ஒரு வழி பிறக்கும். இது மீட்கப்பட்ட பின் அங்கு காவலுக்கு இருக்கும் இந்திய பாதுகாப்பு படை தமிழக மீனவர்களுக்கு பாதுகாப்பளிக்கும். கச்சத் தீவு அளிக்கப்பட்ட போது முறையாக வழிமுறைகள் கடைபிடிக்கப்படவில்லை.

இதுதொடர்பான மசோதாக்களும் நமது பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்படவில்லை.



# ஆரஞ்சு கலரில் அம்சமான வாணி போஜன்



தொலைக்காட்சி சீரியல்களில் நடித்து அதன் பின் தமிழ் திரையுலகில் அறிமுகமானவர் நடிகை வாணி போஜன். பரத்துடன் அவர் நடித்த 'லவ்' என்ற திரைப்படம் வரும் 28ஆம் திகதி வெளியாக இருக்கும் நிலையில் இந்த படத்தின் புரமோஷன் பணிகளில் தற்போது பிசியாக உள்ளார்.

மேலும் அவர் 'பகைவனுக்கு அருள்வாய்' 'கேசினோ' 'ஆரியன்' உள்ளிட்ட படங்களிலும் நடித்து வருகிறார். இந்த நிலையில் இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் வாணி போஜன் 2 மில்லியனுக்கும் அதிகமான ஃபாலோயர்களை வைத்துள்ளார்.

அவ்வப்போது அவர் கவர்ச்சி புகைப்படங்களை பதிவு செய்து ரசிகர்களை திருப்தி செய்து வருகிறார்.

இந்த நிலையில் அவர் எடுத்த போட்டோஷூட் புகைப்படங்களை வெளியிட்டுள்ளார். பிரம்மாண்டமான ஆரஞ்சு கலர் காஸ்ட்யூமில் எடுக்கப்பட்ட இந்த போட்டோஷூட் புகைப்படங்கள் இணையத்தில் வைரல் ஆகி வருகிறன

# மரண பயத்தில் இசையமைப்பாளர்



அண்மையில் தான் இசையமைத்துக் கொண்டிருக்கும் தமிழ் திரைப்படத்தை பார்த்து மரண பயம் ஏற்பட்டதாகவும் இரண்டு மாதங்கள் அதன் தாக்கத்தால் தான் தூங்கவே இல்லை என்றும் இசையமைப்பாளர் எம்.எம்.கீரவாணி தெரிவித்து உள்ளார்.

ராகவா லாரன்ஸ் நடிப்பில், பி வாசு இயக்கத்தில் உருவாகி இருக்கும் திரைப்படம் 'சந்திரமுகி 2'. இந்த படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து தற்போது இறுதி கட்ட பணி நடைபெற்று வருகிறது

இந்த நிலையில் இந்த படத்திற்கு இசையமைத்து வரும் ஆஸ்கார் நாயகன் எம்.எம்.கீரவாணி தனது ட்விட்டர் பக்கத்தில் 'சந்திரமுகி 2' படத்தை பார்த்து எனக்கு தூக்கமே வரவில்லை. அதில் வரும் கேரக்டர்கள் என்னை மரண பயத்தில் ஆழ்த்தியது. இரண்டு மாதங்களாக இந்த படத்தை பார்த்ததால் எனக்கு தூக்கமே இல்லை என்று தெரிவித்துள்ளார்.

இந்த பதிவுக்கு பின்னர் 'சந்திரமுகி 2' படத்திற்கு மிகப்பெரிய எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது

வரும் விநாயகர் சதுர்த்தி அன்று இந்த படம் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் ஹிந்தி ஆகிய ஐந்து மொழிகளில் வெளியாகவுள்ளது.

ராகவா லாரன்ஸ் வேட்டையன் கேரக்டரிலும், சந்திரமுகி கேரக்டரில் பிரபல நடிகை கங்கனா ரனாவத் நடித்திருக்கும் இந்த படத்தில் லட்சுமி மேனன் முக்கிய கேரக்டரில் நடித்துள்ளார்.

# ரசிகர்கள் உயிரிழப்பு ஆறுதல் கூறிய சூர்யா



நடிகர் சூர்யாவின் பிறந்த நாள் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்ட நிலையில் ஆந்திராவைச் சேர்ந்த வெங்கடேஷ் மற்றும் சாய் ஆகிய இரண்டு கல்லூரி மாணவர்கள் சூர்யாவின் கட் அவுட் வைக்க முயன்றனர்.

அப்போது அருகில் இருந்த மின் கம்பியில் கட் அவுட்டின் கம்பி உரசியத்தை அடுத்து இருவரும் மின்சாரம் பாய்ந்து சம்பவ இடத்திலேயே பலியாகினர். இந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் உயிரிழந்த இரண்டு ரசிகர்களின் குடும்பத்தினருடன் நேற்று, வீடியோ அழைப்பு மூலம் சூர்யா பேசினார். அப்போது உயிரிழந்த ரசிகர்கள் குடும்பத்திற்கு தேவையான உதவிகளை செய்து தருவதாக அவர் உறுதி அளித்துள்ளார்.

# ஹாட்ரிக் நோக்கி அதிதியின் பயணம்



இயக்குனர் ஷங்கரின் மகள் அதிதி சங்கர், கார்த்தி நடித்த 'விருமன்' என்ற திரைப்படத்தில் அறிமுகமாகி அண்மையில் வெளியாகி வெற்றி பெற்ற 'மாவீரன்' என்ற திரைப்படத்திலும் நடித்துள்ளார்.

இந்த நிலையில் அவர் நடித்து வரும் மூன்றாவது திரைப்படத்தின் படப்பிடிப்பு தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. விஷ்ணுவர்தன் இயக்கத்தில் நடிகர் அதர்வாவின் சகோதரர் ஆகாஷ் முரளி நடிப்பில் உருவாகி வரும் இந்த படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு சென்னையில் நடந்தது.

இந்த நிலையில் இந்த படத்தின் இரண்டாம் கட்ட படப்பிடிப்பு போர்த்துக்கல் நாட்டின் லிஸ்பன் என்ற நகரில் நடத்த படக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர்.

இதனை அடுத்து அதிதி சங்கர் உட்பட படக்குழுவினர் போர்த்துக்கல் செல்ல இருப்பதாகவும் அங்கு கிட்டத்தட்ட ஒரு மாதம் படப்பிடிப்பு நடத்த திட்டமிடப்பட்டு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்த படமும் வெற்றி பெற்றால் அதிதி ஷங்கருக்கு ஹாட்ரிக் வெற்றி கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.



# கருங்கடல் ஒப்பந்தத்தை புதுப்பிக்க இந்தியா ஆதரவு

உக்ரேன்- ரஷ்யா இடையிலான கருங்கடல் ஒப்பந்தத்தை புதுப்பிக்க ஐ.நா மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு ஆதரவு அளிக்கப்படும் என இந்தியா உறுதியளித்துள்ளது.

உலகின் பல நாடுகளுக்கு கோதுமை, பார்லி, சோளம், சூரியகாந்தி எண்ணெய் உள்பட பல அத்தியாவசியமான உணவு பொருட்களை உக்ரேன் ஏற்றுமதி செய்து வந்தது. இந்நிலையில், உக்ரேன் நேட்டோ அமைப்பில் சேர எதிர்ப்பு தெரிவித்து அந்நாட்டின் மீது ரஷ்யா போர் தொடுத்தது. போரை தொடர்ந்து உக்ரேனின் ஏற்றுமதி பணிகள் தடைப்பட்டு, உலக அளவில் எண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டது.

இதனையடுத்து, கடந்த ஆண்டு ஜூலை மாதம், ஐ.நா. மற்றும் துருக்கியின் முயற்சியால், ரஷ்யா- உக்ரேன் நாடுகளுக்கு இடையே "கருங்கடல் தானிய ஒப்பந்தம்" ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் படி, ஆயுதங்கள் ஏதும் இல்லையென பரிசோதித்து உறுதி செய்த பின் உக்ரேனின் 3 துறைமுகங்களிலிருந்து உணவு பொருட்களை ஏற்றுமதி செய்ய ரஷ்யா ஒப்புதல் அளித்தது.

ஏற்கெனவே இந்த ஒப்பந்தம் இரு முறை புதுப்பிக்கப்பட்டது. தற்போது உடன்படிக்கை காலாவதியான நிலையில், அதனை புதுப்பிக்க ரஷ்யா மறுத்து விட்டது. ஒப்பந்தத்தின் விதிமுறைகளை உக்ரேன் பின்பற்ற வில்லை என ரஷ்யா குற்றம்சாட்டியுள்ளது.

ரஷ்யாவின் விவசாய ஏற்றுமதிகளை மேற்கத்திய நாடுகளின் பொருளாதார தடைகள் தடுத்து வைத்திருப்பதாகவும், இந்த தடைகளை நீக்கினால் மட்டுமே கருங்கடல் ஒப்பந்தத்தில் மீண்டும் பங்கேற்க முடியும் என்று ரஷ்யா நிபந்தனை விதித்துள்ளது.

இதனால் உலக அளவில் உணவு பொருட்களுக்கு மீண்டும் தட்டுப்பாடு ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது. இது குறித்து கவலை தெரிவித்துள்ள ஐ.நா. பொதுச் செயலாளர் அண்டோனியோ குட்ரெஸ், ஒப்பந்தத்தில் மீண்டும் ரஷ்யா இணைய வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். இந்த பிரச்சினையை களைய ஐ.நா எடுக்கும் முயற்சிகளுக்கு இந்தியா ஆதரவு அளிக்கும் என ஐ.நா.வுக்கான இந்திய நிரந்தர தூதர் ருசிர காம்போஜ் தெரிவித்துள்ளார். ரஷ்யா, உணவை போருக்கான ஆயுதமாக பயன்படுத்துவதாக அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வொஷிங்டன்

## விமானத்திலேயே சிறுநீர் கழித்த பெண்




அமெரிக்க விமான நிறுவனமான ஸ்பிரிட் ஏர்லைன்ஸ் விமானத்தில் கடந்த சில நாட்களுக்கு முன் பெண் பயணி பயணித்துள்ளார். விமானம் நடு வானில் பறந்துகொண்டிருந்தபோது அந்த பெண் பயணி கழிவறையை பயன்படுத்த சென்றுள்ளார். ஆனால், அப்பெண் கழிவறையை பயன்படுத்த விமான ஊழியர்கள் அனுமதிக்கவில்லை. விமானத்தின் கழிவறை பூட்டப்பட்டுள்ளது.

இதனால், தன்னை கழிவறையை பயன்படுத்த அனுமதிக்கும்படி அப்பெண் பயணி விமான ஊழியர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். சுமார் 2 மணி நேரமாக அப்பெண் பயணி கழிவறையை பயன்படுத்த விமான ஊழியர்கள் அனுமதிக்கவில்லை.

இதனால் அதிர்ச்சியடைந்த பெண் பயணி விமானம் நடு வானில் பறந்துகொண்டிருந்த நிலையில் தன் இருக்கை அருகேயே சிறுநீர் கழித்தார். இந்த சம்பவம் தொடர்பான வீடியோ சமூகவலைதளங்களில் வைரலாகி வருகிறது.

கைபர் பக்துன்வா

## காதலனை சந்திக்க எல்லை தாண்டிய பெண்



பாகிஸ்தான் நாட்டில் வசித்து வரும் தனது காதலனை சந்திக்க இந்தியாவை சேர்ந்த பெண் ஒருவர் எல்லை தாண்டி சென்றுள்ளதாக தகவல். இது தொடர்பாக பாகிஸ்தான் நாட்டு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாக இந்திய செய்தி முகமை நிறுவனமான ஏஎன்ஐ செய்தி வெளியிட்டுள்ளது.

தலைநகர் புதுடெல்லியை சேர்ந்த 35 வயது பெண்ணான அஞ்சு, பாகிஸ்தான் நாட்டின் கைபர் பக்துன்வா மாகாணத்தில் வசித்து வரும் 29 வயதான தனது காதலன் நஸ்ருல்லாவை சந்திக்க அங்கு சென்றுள்ளார். அவர் அந்த மாகாணத்தில் உள்ள மேல் திர் மாவட்டத்தை சேர்ந்தவர். ஃபேஸ்புக் மூலமாக இருவரும் பேசி பழகியுள்ளனர். அஞ்சுவுக்கு ஏற்கெனவே திருமணம் ஆகி பிள்ளைகளும் உள்ளனர்.

ஆந்திரா

## நாய்க்கு சிலை வைத்து நினைவு நாள் கடைபிடிப்பு



இறந்து போன வளர்ப்பு நாய்க்கு சிலை வைத்து ஏழாம் ஆண்டு நினைவு நாள் கடைபிடிக்கப்பட்டுள்ளது. ஆந்திர மாநிலம் கிருஷ்ணா மாவட்டத்தில் உள்ள அம்பாபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர் ஞானபிரகாஷ் ராவ்.

அவர் ஆசை ஆசையாக வளர்த்து வந்த அஞ்சி என்ற பெயருடைய நாய் ஏழு ஆண்டுகளுக்கு முன் இறந்துவிட்டது. நாய் இறந்தபின் அதன் உடலை தன்னுடைய விவசாய நிலத்தில் புதைத்த ஞான பிரகாஷ் ராவ் அங்கு ஒரு சமாதி கட்டி நாய்க்கு சிலை வைத்தார்.

அப்போது முதல் ஒவ்வொரு ஆண்டும் நாய் இறந்த நாளன்று படையல் போட்டு பூஜை நடத்தி நாயின் நினைவு நாளை அனுஷ்டித்து வருகிறார். இன்று அந்த நாய்க்கு நினைவு நாள் ஆகையால் இன்றும் நாய் சிலைக்கு பூஜைகள் நடத்தி இறந்து போன முன்னோர்களுக்கு செய்வது போல் படையல் போட்டு நினைவு நாளை கடைப்பிடித்தார் ஞான பிரகாஷ் ராவ்.

## லிப்லாக் செய்த கணவனின் நாக்கை கடித்த மனைவி

மனைவியை கட்டாயப்படுத்தி கணவன் உறவு கொள்வதை பாலியல் குற்றமாக (திருமண வன்கலவி - Marital Rape) அறிவிக்க வேண்டும் என்று பலரும் கோரிக்கை வைத்து வரும் நிலையில், ஆந்திராவில் பாலியல் துஷ்பிரயோகம் செய்த கணவனை மனைவி துண்டித்துள்ளார்.

ஆந்திர மாநிலம் கர்னூல் மாவட்டத்தை சேர்ந்த தாரா சந்த், புஷ்பாவதி தம்பதி அடிக்கடி சிறு பிரச்சினைகளுக்காக சண்டையிட்டு வந்ததாக கூறப்படுகிறது. இந்நிலையில் கணவன் - மனைவி இடையே சண்டை ஏற்பட்டு இருக்கிறது. அப்போது தனது மனைவியை சமாதானம் செய்வதற்காக தாரா சந்த் தனது மனைவிக்கு உதட்டில் முத்தம் கொடுத்து லிப்லாக் செய்திருக்கிறார்.

இதனைச் சற்றும் எதிர்பார்க்காத மனைவி பத்மாவதி கோபத்தில் அவருடைய நாக்கை பலமாக கடித்து வைத்துள்ளார். நாக்கில் ரத்தம் சொட்ட சொட்ட வலியால் துடிதுடித்த தாரா சந்தை அவரது குடும்பத்தினர் மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக அவரது மனைவியிடம் காவல்துறையினர் விசாரித்தபோது தனக்கு விருப்பம் இல்லாமல் வலுக்கட்டாயமாக முத்தம் கொடுத்ததால் நாக்கை கடித்து வைத்ததாக வாக்குமூலம் அளித்திருக்கிறார்.



இலங்கைக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# முன்னிலையில் பாகிஸ்தான்




இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் பாகிஸ்தான் முன்னிலையில் காணப்படுகின்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை பாகிஸ்தான் வென்ற நிலையில், கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் நேற்று ஆரம்பமான இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையின் அணித்தலைவர் திமுத் கருணாரத்ன, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார். இலங்கை சார்பாக டெஸ்ட் போட்டிகளில் டில்ஷான் மதுஷங்க அறிமுகத்தை மேற்கொண்டு கடந்த போட்டியில் விளையாடிய விஷ்வ பெர்ணாண்டோவை பிரதியிட்டதுடன், கசுன் ராஜிதவை அசித பெர்ணாண்டோ பிரதியிட்டிருந்தார்.

இந்நிலையில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை வரிசையாக ஷகீன் ஷா அஃப்ரிடி, நசீம் ஷா (3), அப்ரார் அஹ்மட்டிடம் (4) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 166 ஓட்டங்களையே பெற்றது. தனஞ்சய டி சில்வா 57, தினேஷ் சந்திமால் 34, ரமேஷ் மெண்டிஸ் 27 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் பாகிஸ்தான், நேற்றைய முதல் நாள் முடிவில் 2 விக்கெட்டுகளை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில், அப்துல்லா ஷஃபிக் 74 ஓட்டங்களுடனும், அணித்தலைவர் பாபர் அஸாம் எட்டு ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர். முன்னதாக ஷண் மசூட் 51 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தனர்.

அமர் திரு, திருமதி மகாலிங்கசிவம் ஞாபகார்த்த தொடர்

## சம்பியனான சம்மாந்துறை







வி.ரி. சகாதேவராஜா

காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் 40ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு காரைதீவு விளையாட்டுக் கழகமும் விபுலானந்தா சனசமூக நிலையமும் இணைந்து நடாத்திய அமரர்களான திரு, திருமதி மகாலிங்கசிவம் ஞாபகார்த்த டி-10 கடினபந்து கிரிக்கெட் தொடரில் சம்மாந்துறை விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

விபுலானந்தா மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற 32 கழகங்கள் பங்கேற்ற விலகல் முறையிலான இத்தொடரின் இறுதிப் போட்டியில் சாய்ந்தமருது பிளாஸ்ரர் அணியை வென்றே சம்மாந்துறை சம்பியனானது.

சம்பியனான சம்மாந்துறைக்கு 30,000 ரூபாயும் பாரிய வெற்றிக் கிண்ணமும், பிளாஸ்ரர் அணிக்கு 20,000 ரூபாயும் வெற்றிக் கிண்ணமும் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன.

## வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த 4ஆவது ஆஷஸ் டெஸ்ட்



இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், மன்செஸ்டரில் கடந்த புதன்கிழமை ஆரம்பித்து நேற்று முன்தினம் முடிவுக்கு வந்த நான்காவது டெஸ்ட்டானது மழை காரணமாக வெற்றி தோல்வியின்றி நிறைவுக்கு வந்த நிலையில், 2-1 என்ற நிலையில் தொடரில் அவுஸ்திரேலியா முன்னிலை வகிக்கிறது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

அவுஸ்திரேலியா: 317/10 (துடுப்பாட்டம்: மர்னுஸ் லபுஷைன் 51, மிற்செல் மார்ஷ் 51, ட்ரெவிஸ் ஹெட் 48, ஸ்டீவ் ஸ்மித் 41, மிற்செல் ஸ்டார்க் ஆ.இ 36, டேவிட் வோர்னர் 32 ஓட்டங்கள். பந்துவீச்சு: கிறிஸ் வோக்ஸ் 5/62, ஸ்டூவர்ட் ப்ரோட் 2/68, ஜேம்ஸ் அன்டர்சன் 1/51, மார்க் வூட் 1/60, மொயின் அலி 1/65)

இங்கிலாந்து: 592/10 (துடுப்பாட்டம்: ஸக் குறொலி 189, ஜொனி பெயார்ஸ்டோ ஆ.இ 99, ஜோ றூட் 84, ஹரி ப்ரூக் 61, மொயின் அலி 54, பென் ஸ்டோக்ஸ் 51 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜொஷ் ஹேசில்வூட் 5/126, கமறொன் கிறீன் 2/64, மிற்செல் ஸ்டார்க் 2/137, பற் கமின்ஸ் 1/129)

அவுஸ்திரேலியா: 214/5 (துடுப்பாட்டம்: மர்னுஸ் லபுஷைன் 111, மிற்செல் மார்ஷ் ஆ.இ 31, டேவிட் வோர்னர் 28 ஓட்டங்கள். பந்துவீச்சு: மார்க் வூட் 3/27, கிறிஸ் வோக்ஸ் 1/31, ஜோ றூட் 1/32)

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# இந்தியாவின் வெற்றிக்கு 8 விக்கெட்டுகள் தேவை




மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் இந்தியா வெற்றி பெறுவதற்கு இறுதி நாளில் 8 விக்கெட்டுகளைக் கைப்பற்ற வேண்டியுள்ளது.

போர்ட் ஓஃப் ஸ்பெய்னில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்த இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் இப்போட்டியின் நேற்று முன்தின நான்காம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் 5 விக்கெட்டுகளை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்து முகேஷ் குமார், மொஹமட் சிராஜ்ஜிடம் (4) வரிசையாக விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 255 ஓட்டங்களையே பெற்றது.

இதையடுத்து தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, அணித்தலைவர் றோஹித் ஷர்மாவின் 57 (44), இஷன் கிஷனின் ஆட்டமிழக்காத 52 (34), யஷஸ்வி ஜைஸ்வாலின் 38 (30), ஷுப்மன் கில்லின் ஆட்டமிழக்காத 29 (37) ஓட்ட்டங்களோடு அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி 2 விக்கெட்டுகளை இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றபோது தமது இனிங்ஸை இடைநிறுத்தியது. பந்துவீச்சில், ஷெனொன் கப்ரியல், யஷஸ்வி ஜைஸ்வால் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இந்நிலையில் 365 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடி வரும் மேற்கிந்தியத் தீவுகள், நேற்று முன்தின நான்காம் நாள் முடிவில் 2 விக்கெட்டுகளை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில், டிட்டினேரியன் சந்திரபோல் 24 ஓட்டங்களுடனும், ஜெர்மைன் பிளக்வூட் 20 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர். முன்னதாக அணித்தலைவர் கிறேய்க் பிறத்வெய்ட் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். வீழ்ந்த்தப்பட்ட 2 விக்கெட்டுகளையும் இரவிச்சந்திரன் அஷ்வின் கைப்பற்றியிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 25 ஜூலை 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.